## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-4 - சார்வே
## (ஆழ்வார் தாம் முதலில் அநுஸந்தித்த பக்தி, ப₂லத்தோடு சேர்ந்தமையை அருளிச் செய்தல்)

3700 * சார்வே தவநெறிக்குத் * தாமோதரன் தாள்கள் *
கார்மேக வண்ணன் * கமல நயனத்தன் **
நீர் வானம் மண் எரி காலாய் * நின்ற நேமியான் *
பேர் வானவர்கள் * பிதற்றும் பெருமையனே 1

3701 பெருமையனே வானத்து இமையோர்க்கும் * காண்டற்
கருமையனே * ஆகத்து அணையாதார்க்கு ** என்றும்
திருமெய் உறைகின்ற * செங்கண்மால் * நாளும்
இருமை வினை கடிந்து * இங்கு என்னை ஆள்கின்றானே 2

3702 ஆள்கின்றான் ஆழியான் * ஆரால் குறைவுடையம்? *
மீள்கின்றதில்லைப் * பிறவித் துயர் கடிந்தோம் **
வாள்கெண்டை ஒண்கண் * மடப்பின்னை தன் கேள்வன் *
தாள் கண்டு கொண்டு * என் தலை மேல் புனைந்தேனே 3

3703 தலை மேல் புனைந்தேன் * சரணங்கள் * ஆலின்
இலை மேல் துயின்றான் * இமையோர் வணங்க **
மலை மேல் தான் நின்று * என் மனத்துள் இருந்தானை *
நிலை பேர்க்கலாகாமை * நிச்சித்திருந்தேனே 4

3704 நிச்சித்திருந்தேன் * என் நெஞ்சம் கழியாமை *
கைச்சக்கரத்து அண்ணல் * கள்வம் பெரிதுடையன் **
மெச்சப்படான் பிறர்க்கு * மெய் போலும் பொய் வல்லன் *
நச்சப்படும் நமக்கு * நாகத்தணையானே 5

3705 நாகத்தணையானை * நாள்தோறும் ஞானத்தால் *
ஆகத்து அணைப்பார்க்கு * அருள் செய்யும் அம்மானை **
மாகத்து இளமதியம் * சேரும் சடையானை *
பாகத்து வைத்தான் தன் * பாதம் பணிந்தேனே 6

3706 பணி நெஞ்சே! நாளும் * பரம பரம்பரனை *
பிணி ஒன்றும்[1] சாரா * பிறவி கெடுத்தாளும் **
மணி நின்ற சோதி * மதுசூதன் என்னம்மான் *
அணி நின்ற செம்பொன் * அடல் ஆழியானே 7

3707 ஆழியான் ஆழி * அமரர்க்கும் அப்பாலான் *

---
[1] என்றும்

ஊழியான் ஊழி படைத்தான் * நிரை மேய்த்தான் **
பாழியந்தோளால் * வரை எடுத்தான் பாதங்கள் *
வாழி என் நெஞ்சே! * மறவாது வாழ் கண்டாய் 8

3708 கண்டேன் கமல மலர்ப் பாதம் * காண்டலுமே *
விண்டே ஒழிந்த * வினை ஆயினவெல்லாம் **
தொண்டே செய்து என்றும் * தொழுது வழி ஒழுக *
பண்டே பரமன் பணித்த * பணி வகையே 9

3709 வகையால் மனமொன்றி * மாதவனை * நாளும்
புகையால் விளக்கால் * புதுமலரால் நீரால் **
திசை தோறு அமரர்கள் * சென்று இறைஞ்ச நின்ற *
தகையான் சரணம் * தமர்கட்கு ஓர் பற்றே 10

3710 * பற்றென்று பற்றிப் * பரம பரம்பரனை *
மல்திண்தோள் மாலை * வழுதி வளநாடன் **
சொல் தொடை அந்தாதி * ஓராயிரத்துள் இப்பத்தும் *
கற்றார்க்கு ஓர் பற்றாகும் * கண்ணன் கழலிணையே 11

**அடிவரவு:** சார்வே பெருமை ஆள் தலை நிச்சித்து நாகம் பணி
ஆழியான் கண்டேன் வகை பற்று கண்ணன்